2017 மார்ச் 22]

63—

துணை மின் நிலையம்

***1205—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொல்லிமலைப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அங்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் தேவை இருப்பின் புதிய மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான், உங்களால் நான், உங்களுக்காகவே நான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற தாரக மந்திரத்தை ஏற்று, தமிழக மக்களுக்காக 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் அல்லும், பகலும் அயராது பாடுபட்டு தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றும், நம்மை விட்டுப் பிரிந்தாலும், இந்தப் புவி உள்ளவரை நம்முடைய மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கியும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும்*

வணங்குகிறேன், எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலைப் பகுதியில் 100–க்கு 99 சதவிகிதம் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கொல்லிமலையில் உள்ள மக்கள் விவசாயத்தையும், விவசாயக் கூலித் தொழிலையும் நம்பி வாழ்கின்றார்கள். அங்கே ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் எல்லாம் அமைத்து, இன்றையதினம் அதனை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றார்கள். மேலும், கொல்லிமலைப் பகுதிக்கு, காளப்பநாயக்கன்பட்டி துணை மின் நிலையத்தின் மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10-25

காளப்பநாயக்கன்பட்டி துணை மின் நிலையத்திலிருந்து இரண்டு மின் பாதைகள் வழியாக கொல்லிமலைக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஒன்று, மேலுக்குறிச்சி பழனியப்பார்கோயில் அடிவாரத்திலிருந்தும், இரண்டாவது, காரவள்ளி பகுதியிலிருந்தும் மின்சாரம் கொல்லிமலைக்குச் செல்கிறது. இருந்தாலும் அங்கிருந்து 40, 50 கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கின்ற 266 குக்கிராம மக்களுக்கு மின்சார அழுத்தம் குறைவாக உள்ள காரணத்தினால், அங்கே துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதுமாத்திரமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகரன், உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். அத்தோடு விடுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைப் பகுதிக்கு காளப்பநாயக்கன்பட்டி பகுதியிலுள்ள 110/22 K.V. துணை மின்நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதிலே 2X16 MVA மின்மாற்றிகள் இருக்கின்ற காரணத்தினால் அதனுடைய, மின்பளு 20.1 சதவிகிதம் மட்டும்தான் இருக்கின்றது. அது முழுக்க முழுக்க விவசாயம் நடைபெறக்கூடிய பகுதியாக இருப்பதால், இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற மெட்டாலா 110/22 K.V.–யிலிருந்து புதிய

2017 மார்ச் 22]

மின்பாதை அமைக்கப்படவிருக்கின்றது. அந்த மின்பாதையை அமைக்கின்றபோது அந்தப் பகுதி விவசாயத்திற்குத் தேவையான சீரான மின்சாரம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்டாலாவில் அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், கொல்லிமலைப் பகுதியில் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களால் புதிய நீர் மின் திட்டம் உருவாக்கப்பட்டு இன்றைக்கு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டு, எப்போது முடிக்கப்படும் என்பதனையும், அதுமாத்திரமல்லாமல், அந்த மலைப்பகுதி மக்களுக்கு அந்த நீர் மின் திட்டம்மூலமாக என்னென்ன பயன்கள் எல்லாம் கிடைக்கும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்னதிலே ஒரு சிறிய திருத்தம். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களால் மெட்டாலா பகுதியில் புதிய துணை மின் நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து புதிய பாதை அமைக்கப்படும் என்று சொன்னேன். அதைத் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு கொல்லிமலைப் பகுதியில் ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டுமென்பதற்காக, 20 மெகா வாட் அளவிற்கு 270 கோடி ரூபாயில் நீர் மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது அதற்குண்டான தொகையை ஒதுக்கி, அதற்கு டெண்டர் விடப்பட்டு, இப்போது பணிகள் ஆரம்பிக்கப்படும் நிலையிலே இருக்கின்றது.*

[2017 மார்ச் 22

2 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளுக்குள் அந்தப் பணி முடிக்கப்பட வேண்டும். 3 ஆண்டுகளில் முடிகின்றபோது அங்கு உற்பத்தியாகின்ற மின்சாரத்தை வெளியே கொணருவதற்காக புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட இருக்கின்றது. அப்படி அங்கே தேவையிருப்பின், அந்தத் துணை மின் நிலையத்தோடு மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற பகுதிக்கும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கக்கூடிய திருச்சுழி சட்டப்பேரவை தொகுதி முற்றிலும் விவசாய நிலங்கள் நிறைந்திருக்கக்கூடிய விவசாயப் பகுதியாகும். இப்போதுதான் அங்கே புதிய தொழிற்சாலைகள் உருவாகக்கூடிய நிலைமைகள் வந்திருக்கின்றன. ஆனால், தொகுதியிலே குறைந்த மின்னழுத்தம் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக தொடர்ந்து பல வருடங்களாகவே இருக்கிறது. கிராமங்களிலே அவ்வப்போது தோன்றக்கூடிய இந்தப் பிரச்சினைகளுக்கு புதிய மின் மாற்றிகளை அமைப்பதன்மூலமாகதீர்வு காணப்பட்டு வருகிறது. கடந்த முறைகூட இதே அவையிலே இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டுச் சொன்னபோது, சில கிராமங்களிலே மின் மாற்றிகளை அமைக்க வேண்டுமென்றபோது, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை உடனடியாக எடுத்து, அந்தக் கிராமங்களிலெல்லாம் இப்போது புதிய மின்மாற்றிகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்திலே நான் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், குறைந்த மின்சார அழுத்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் கண்டிட வேண்டும். அதற்கு இந்தமுறை எனது திருச்சுழி சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய எம். ரெட்டியப்பட்டி, வீரசோழன், முடுக்கன்குளம் மற்றும் தொகுதியின் தலைநகரமாக இருக்கக்கூடிய திருச்சுழி ஆகிய பகுதிகளில் புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு உரிய கருத்துருக்கள், முன்மொழிவுகள் அரசாங்க அனுமதியை வேண்டி அனுப்பப்பட்டிருக்கின்றன. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று, அந்தப் பகுதியிலே புதிய*

2017 மார்ச் 22]

துணை மின் நிலையங்களை உருவாக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதி, விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்றது; அங்கே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் உடனடித் தேவை என்றால், மின்மாற்றியை உடனடியாக மாற்றி, மின் பளுவை குறைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொதுவாக, அனைத்து உறுப்பினர்களும் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கோருகிறார்கள். இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால், புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான இட வசதி கிடைப்பதில்லை. சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சிறிதளவு கவனம் செலுத்தி, போதிய இடத்தைப் பெற்றுத் தருவார்களேயானால், துணை மின் நிலையம் அமைப்பதில் எங்களுக்கு எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், 12 மாநகராட்சிகளிலும் இடம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் பிரச்சினை இல்லை. எனினும், ஒருசில இடங்களில், அதாவது, மின் பாதை கொண்டு செல்லப்படும் பகுதிகளிலுள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும்பட்சத்தில், துணை மின் நிலையம் அமைப்பதில் பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளை நாங்கள் ஆய்வு செய்கின்றோம். உடனடித்தேவை என்றால் மின்மாற்றிகளை மாற்றிக்கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அதேபோன்று, துணை மின் நிலையம் அமைப்பதற்கும் ஆய்வு செய்து, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*